பொருளடக்கம்

✿

குகைவாசிகள் கொள்கைப் பாதை / 7
குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 16
முன்னுரை / 21

பகுதி 1: அன்னை ஆயிஷாவும் நபித்தோழர்களும் / 23

1 அன்னை ஆயிஷா ﵂ அவர்களின் குடும்பம் / 25
2 நபிமொழி நாயகி / 39
3 முஃப்தியா / 42

பகுதி 2: ஆயிஷா தனித்துவங்கள் 40 / 53

அன்னை ஆயிஷா ﵂ தனித்துவங்கள் 40 / 55
1 நபியவர்களின் மனைவியரில் கன்னியானவர் / 55
2 உலகத்தைவிட நபியைத் தெரிவுசெய்த முதல் நபர் / 55
3 முஸ்லிம் உம்மத்திற்கு நன்மையானவர் / 58
4 அன்னையின் கற்புத் தூய்மையை அல்லாஹ் பேசினான் / 59
5 அன்னையைப்பற்றி அல்குர்ஆனில் ஓதுகிறோம் / 73
6 அன்னையைப்பற்றி அவதூறு பேசுபவன் காஃபிர் / 73
7 பத்தினிமீது அவதூறு சொன்னால் கசையடி / 73
8 தயம்மும் சட்டம் அன்னையால் இறங்கியது / 74
9 நபியின் மனைவியாக வஹ்யி மூலம் அறிவிக்கப்பட்டவர் / 74
10 நபியவர்களின் மிக விருப்பமான மனைவி / 75
11 அன்னையை நேசிப்பது முஸ்லிம்களின் கடமை / 75
12 அன்னையை ஏசுபவனுக்கு மரண தண்டனை / 76
13 அன்னையின் தந்தையை நிராகரிப்பவன் காஃபிர் / 77
14 அன்னை ஸவ்தாவின் நாளை அன்பளிப்பாகப் பெற்றவர் / 77

15 நபியவர்களின் திருப்தியைப் பெற
அன்னைக்கு அன்பளிப்பு / 79

16 அன்னையின் வீட்டில்தான் நபியவர்கள் மரணித்தார்கள் / 79

17 அன்னையின் தந்தையே உம்மத்தின் முதல் கலீஃபா / 79

18 அன்னையின் நாளில் நபியவர்கள் மரணித்தார்கள் / 80

19 அன்னையின் வீட்டில்தான் நபியவர்களின் நல்லடக்கம் / 80

20 அன்னையின் நெஞ்சில் சாய்ந்தே
நபியவர்கள் மரணித்தார்கள் / 80

21 நபியவர்களின் உயிர் பிரியும்போது
அன்னை மட்டுமே உடனிருந்தார்கள் / 80

22 உமிழ்நீரின் கொடையைப் பெற்றவர் / 80

23 ஜிப்ரீலின் ஸலாமைப் பெற்றவர் / 81

24 அன்னையின் போர்வைக்குள்
நபியவர்களுக்கு வஹ்யி வந்தது / 81

26 பத்து வயதிலேயே போரில் நீர் புகட்டியவர் / 83

27 கலீஃபா உமர் ﷺ செய்த கண்ணியம் / 83

28 நபியுடன் ஓட்டப் பந்தயம் ஓடியவர் / 84

29 நபியவர்களுடன் விளையாட்டுகளை ரசித்தவர் / 85

30 திருட்டுக்கான தண்டனையின்
சட்ட அளவைத் தெளிவாக்கியவர் / 86

31 சுவன நற்செய்தியின் தனித்துவமான தந்தையைப் பெற்றவர் / 87

32 இரவுத் தொழுகையில் நபியவர்களுக்கு
எதிரே படுத்திருந்தவர் / 87

33 பெண்களில் சிறந்தவர் / 88

34 இஃதிகாஃபில் நபியவர்களுக்குத் தலைவாரியவர் / 89

35 நபியவர்களால் சாந்தமாக அணுகப்பட்டவர் / 89

36 நபியவர்களுக்கு அல்லாஹ்வினால் தேர்வுசெய்யப்பட்டவர் / 91

37 யுத்தத்தை வழிநடத்தியவர் / 92

38 துறவறம் வாழ்ந்தவர் / 96

39 அருள்வளமிக்க விருந்தளிப்பவர் / 97

40 அருள்வளமிக்க விருந்தளிப்பவர் / 102

1

அன்னை ஆயிஷா ﵂ அவர்களின் குடும்பம்

✿

பிறக்கும்போதே ஒரு சிறப்பு

நபியவர்களை அல்லாஹ் நபியாக அனுப்பிய நான்காம் வருடம் அன்னை ஆயிஷா ﵂ அவர்கள் பிறந்தார்கள். சரித்திர ஆசிரியர்கள் சிலர் ஐந்தாம் வருடம் என்றும் கூறுகிறார்கள். எந்த வருடமாயினும் தாயும் தந்தையும் முஸ்லிம்களாக இருந்தபோதுதான் அன்னையவர்கள் பிறந்தார்கள். இப்பேறு நபியவர்களின் மனைவியராகிய நம்முடைய அன்னையர் வேறு எவருக்கும் கிடைக்கவே இல்லை.

அபூ பக்ரின் அருமைப் புதல்வி

அன்னையவர்களின் தந்தை பெயர் அப்துல்லாஹ் இப்னு உஸ்மான் ﵁. நாம் அனைவரும் அபூ பக்ர் சித்தீக் ﵁ என அழைக்கிறோம். இவ்வுலகில் ஆண்களில் முதன் முதலாக இஸ்லாமில் இணைந்துகொண்ட அபூ பக்ர் சித்தீக் ﵁ அவர்களுக்கு நான்கு மனைவிகள் மூலம் 3 ஆண்களும் 3 பெண்களுமாக 6 குழந்தைகள் பிறந்தார்கள்.

அப்துல்லாஹ் மற்றும் அஸ்மா

முதலாவது மனைவியின் பெயர் குதைலா என்பதாகும். இவர் மூலம் அப்துல்லாஹ் ﵁ அவர்களும் அஸ்மா ﵂ அவர்களும் பிறந்தார்கள். அன்னை ஆயிஷா ﵂ அவர்களின் தந்தையாகிய அபூ பக்ருக்குப் பிறந்த இந்த அப்துல்லாஹ் ﵁ எனும் நபித் தோழர் மூலம் நமக்கு ஆதாரப்பூர்வமான நபிமொழிகள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், நபியவர்களும் அபூ பக்ர் ﵁ அவர்களும் மக்காவாசிகளுக்குத் தெரியாமல் ஹிஜ்

அன்னை ஆயிஷா ﵂ தனித்துவங்கள் 40

✿

۞ 1 ۞

நபியவர்களின் மனைவியரில் கன்னியானவர்

கன்னி கழியாத மனைவியாக அன்னை ஆயிஷா ﵂ அவர்கள் மட்டுமே நபியவர்களுக்குக் கிடைத்துள்ளார்கள். நமது ஏனைய அன்னையர் அனைவரும் அவர்களை நபியவர்கள் திருமணம் செய்வதற்கு முன்பாக வேறு கணவர்களை மணந்துள்ளார்கள்.

۞ 2 ۞

உலகத்தைவிட நபியைத் தெரிவுசெய்த முதல் நபர்

அல்லாஹ் கூறுகிறான்:

يَـا أَيُّهَا النَّبِيُّ قُلْ لِأَزْوَاجِكَ إِنْ كُنْتُنَّ تُرِدْنَ الْحَيَـاةَ الدُّنْيَا وَزِينَتَهَا فَتَعَالَيْنَ أُمَتِّعْكُنَّ وَأُسَرِّحْكُـنَّ سَرَاحًا جَمِيلًا وَإِنْ كُنْتُنَّ تُرِدْنَ اللَّهَ وَرَسُـولَهُ وَالدَّارَ الْآخِرَةَ فَإِنَّ اللَّهَ أَعَدَّ لِلْمُحْسِنَاتِ مِنْكُنَّ أَجْرًا عَظِيمًا

நபியே! உம்முடைய மனைவியருக்கு நீர் கூறுவீராக: நீங்கள் இவ்வுலக வாழ்க்கையையும் அதன் அலங்காரத்தையும் நாடுபவர்களாக இருந்தால், வாருங்கள் (உங்களுக்கு வாழ்க் கைக்குரியதைக் கொடுத்து) சுகத்தை அளிக்கிறேன்; அழகிய முறையில் திருமணப் பந்தத்தை முறித்தும் விடுகிறேன். அன்றியும், நீங்கள் அல்லாஹ்வையும் அவனுடைய தூத ரையும் மறுமை வீட்டையும் நாடுபவர்களாக இருந்தால், அப்பொழுது நிச்சயமாக அல்லாஹ் உங்களில் (இத்தகைய) நன்மையுடையோருக்கு மகத்தான கூலியைத் தயார் செய்து வைத்திருக்கிறான். (குர்ஆன் 33:28,29)

இவ்விரு வசனங்களும் இறங்கியவுடன் நபியவர்கள் முதலா வதாக அன்னை ஆயிஷாவிடமே வந்தார்கள்.

நிரூபிக்கப்படாதிருந்தால் எண்பது கசையடி கொடுப்பது கட்டாயமாகும்.

۞ 8 ۞

தயம்மும் சட்டம் அன்னையால் இறங்கியது

இந்த அவதூறுச் சம்பவத்தின் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கு அன்னையவர்கள் மூலம் தயம்முமிற்குக் கிடைத்த நற்பேறு இதிலும் கிடைத்துள்ளது. ஏனெனில், இது குர்ஆன் வசனங் களாகும். நபிமொழிகளில் அறிஞர்களிடையே ஏற்படும் வாதம் பிரதிவாதங்கள் இதில் ஏற்பட இடமேயில்லை.

۞ 9 ۞

நபியின் மனைவியாக வஹ்யி மூலம் அறிவிக்கப்பட்டவர்

அன்னை ஆயிஷா ﵂ அவர்கள் நபியவர்களுக்குத் திருமணத் திற்கு முன்பே கனவில் காட்டப்பட்டார்கள். முஸ்லிம் நூலில் மூன்று முறை காண்பிக்கப்பட்டதாகவும் புகாரீ, அஹ்மது ஆகிய நூல்களில் இரண்டு முறை காண்பிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

எப்படியாயினும் நபிமார்களுக்குக் கனவும் வஹ்யின் வெளிப் பாடுதான். அல்லாஹ்வின் தோழர் இப்றாஹீம் ﵇ அவர்கள் தனது மகனைக் குர்பான் கொடுப்பதற்குக் கனவின் மூலம்தான் அல்லாஹ் அறிவித்தான் என்பதை நாம் குர்ஆன் மூலம் அறிந்துள்ளோம்.

أَنَّ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ لَهَا: أُرِيتُكِ فِي المَنَامِ مَرَّتَيْنِ، أَرَى أَنَّكِ فِي سَرَقَةٍ مِنْ حَرِيرٍ، وَيَقُولُ: هَذِهِ امْرَأَتُكَ، فَاكْشِفْ عَنْهَا، فَإِذَا هِيَ أَنْتِ، فَأَقُولُ: إِنْ يَكُ هَذَا مِنْ عِنْدِ اللَّهِ يُمْضِهِ

வெள்ளைப் பட்டுத் துணியில் (திர்மிதீ நூலில் பச்சை நிறப் பட்டாடை எனக் குறிக்கப்பட்டுள்ளது) அன்னையவர்களைச் சுமந்து வந்த மலக்கு 'இவர் உங்கள் மனைவியாவார்' என்று கூறினார். 'இது அல்லாஹ்வின் ஏற்பாடாக இருந்தால் இது நடைபெற்றே தீரும்' என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (புகாரீ 3895 முஸ்லிம் 2438, முஸ்னது அஹ்மது 24142)

۞ 13 ۞

அன்னையின் தந்தையை நிராகரிப்பவன் காஃபிர்

அன்னை ஆயிஷா ﵂ அவர்களின் தந்தை நபித்தோழர் அல்லர் என்று கூறுபவன் காஃபிராகிவிடுவான் என இமாம் ஷாஃபிஈ ﵀ அவர்கள் தீர்ப்பளித்துள்ளார்கள். ஏனெனில், அல்லாஹ் குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்:

ثَانِيَ اثْنَيْنِ إِذْ هُمَا فِي الْغَارِ إِذْ يَقُولُ لِصَاحِبِهِ لَا تَحْزَنْ إِنَّ اللَّهَ مَعَنَا فَأَنْزَلَ اللَّهُ سَكِينَتَهُ عَلَيْهِ

இருவரில் ஒருவராக அவர் இருக்க (எதிரிகள் சூழ்ந்துகொண்ட சமயத்தில் இந்த) இருவரும் (ஸவ்ர் மலைக்) குகையில் இருந்தபோது (நம் தூதர்) தன்னுடன் குகையிலிருந்த தோழ (ராகிய அபூ பக்)ரை நோக்கி, 'நீர் கவலைப்படாதீர் நிச்சயமாக அல்லாஹ் நம்முடனிருக்கின்றான்' என்று அவர் கூறிய நேரத்தில் (அல்லாஹ் அவருக்கு உதவி செய்துள்ளான்) அப்போது அல்லாஹ்மீது தன்னுடைய அமைதியை இறக்கி வைத்தான். (9:40)

இந்தக் குர்ஆன் வசனத்தில் 'நபியவர்களுடன்கூட இருந்த தோழர் அபூ பக்ர் ﵁ அவர்கள் மட்டும்தான்' என எல்லோரும் ஏகோபித்து ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இந்த வசனத்தில் நபியவர்களின் தோழர் என்று கூறப்பட்டிருப்பதால் அபூ பக்ர் ﵁ அவர்கள் ஒரு நபித்தோழர் என்பது அல்லாஹ்வின் கட்டளையாகும். ஆகவேதான் அன்னை ஆயிஷா ﵂ அவர்களின் தந்தை அபூ பக்ர் ﵁ அவர்களை நபித்தோழர் அல்லர் எனக் கூறுபவன் காஃபிராகிவிடுகிறான்.

۞ 14 ۞

அன்னை ஸவ்தாவின் நாளை அன்பளிப்பாகப் பெற்றவர்

அன்னை ஸவ்தா ﵂ அவர்கள் தனக்குரிய நாளை அன்னை ஆயிஷா ﵂ அவர்களுக்கு அன்பளிப்புச் செய்திருந்தார்கள்.

நபி ﷺ அவர்கள் தங்கள் மனைவிகளுக்கிடையே யாருக்கும் குறைவு ஏற்படாத வகையில் நேர்மையாக வாழ்ந்து வழிகாட்டி

இதுவும் அன்னையவர்களின் தனிச்சிறப்புகளில் ஒன்றாகும். *(அஹ்மது 24143)*

❁ 33 ❁

பெண்களில் சிறந்தவர்

அபூ மூஸா ﷺ அவர்கள் அறிவிக்கும் நபிமொழி பின்வருமாறு:

كَمَلَ مِنَ الرِّجَالِ كَثِيرٌ، وَلَمْ يَكْمُلْ مِنَ النِّسَاءِ إِلَّا آسِيَةُ امْرَأَةُ فِرْعَوْنَ، وَمَرْيَمُ بِنْتُ عِمْرَانَ، وَإِنَّ فَضْلَ عَائِشَةَ عَلَى النِّسَاءِ كَفَضْلِ الثَّرِيدِ عَلَى سَائِرِ الطَّعَامِ

ஆண்களில் அதிகமானோர் முழுமை பெற்றிருக்கிறார்கள். பெண்களில் இம்ரானின் மகள் மர்யமையும், பிர்அவ்னின் மனைவி ஆசியாவையும் தவிர வேறெவரும் முழுமை பெறவில்லை. உலகிலுள்ள பெண்களில் ஆயிஷாவின் சிறப்பு மற்றெல்லா உணவுகளையும்விட ஸரீத் என்னும் உணவுக்குரிய சிறப்பைப் போன்றதாகும் என நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். *(புகாரீ 3411)*

நபியவர்கள் காலத்து உணவுகளில் ஸரீத் என்னும் உணவு அறபுமக்களிடையே சிறப்புப் பெற்றிருந்தது. தக்கடி என்று இப்போது சிலர் கொழும்பில் கூறுகிறார்கள். நோன்பு காலங்களில் இந்தியாவிலும் இதனை ஹோட்டல்களிலும் வீடுகளிலும் பெற்றுக்கொள்ள முடியும். கோதுமை மாவும் இறைச்சியும் கலந்து கூழாகச் சமைப்பார்கள். இன்னும் சில இடங்களில் காய் கீரை வகைகளையும் சேர்த்துக் கூழாகச் சமைப்பார்கள். சிலர் கொத்து ரொட்டிக்குத்தான் ஸரீத் என்றும் சொல்வார்கள். ஏனெனில், அதற்குக் கோதுமை ரொட்டியும் இறைச்சியும் காய் கறிகளும் சேர்த்து இலங்கை முழுக்க சில ஹோட்டல்களில் காது செவிடாகும் சத்தத்தில் இரும்புத் தட்டத்தில் இரும்புக் கத்தியால் அடித்துத் தூளாக்கித்தருவார்கள். ஆனால், கூழாக இருக்காது; வறுத்தெடுப்பார்கள்.

எப்படியாயினும் நபியவர்கள் காலத்தில் இப்படி இருந்திருக்க முடியாது. இப்பொழுது அறபு நாடுகளிலுள்ள வீடுகளிலோ ஹோட்டல்களிலோ ஸரீத் உணவைக் காணவே முடியாது.

فَإِنَّكِ تَقُولِينَ: لاَ وَرَبِّ مُحَمَّدٍ، وَإِذَا كُنْتِ عَلَيَّ غَضْبَى، قُلْتِ: لاَ وَرَبِّ إِبْرَاهِيمَ 'قَالَتْ: قُلْتُ: أَجَلْ وَاللَّهِ يَا رَسُولَ اللَّهِ، مَا أَهْجُرُ إِلَّا اسْمَكَ

ஒரு முறை நபியவர்கள் அன்னையவர்களைப் பார்த்து, 'நீ எப்போது என்னுடன் கோபமாக உள்ளாய்? எப்போது மகிழ்ச்சியாக உள்ளாய்?' என்பதை அறிந்துகொள்வேன் என்றார்கள். 'எப்படி அறிவீர்கள்?' என்று அன்னையவர்கள கேட்டபோது, 'முஹம்மதின் இரட்சகன்மீது ஆணையாக!' என்று கூறினால், நீ என்னுடன் மகிழ்ச்சியாக உள்ளாய் என்று அறிவேன். 'இப்றாஹீமின் இரட்சகன்மீது ஆணையாக!' என்று கூறினால் என்மீது கோபமாக இருக்கிறாய் என்பது அர்த்தமாகும் என்றார்கள்.

இதனைக் கேட்ட அன்னையவர்கள் கோபத்துடன் உங்கள் பெயரை உச்சரிக்க விரும்பவில்லை எனப் பதிலளித்தார்கள். *(புகாரீ 5228, முஸ்லிம் 367, நஸயீ 309)*

مَا غِرْتُ عَلَى امْرَأَةٍ لِرَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ كَمَا غِرْتُ عَلَى خَدِيجَةَ، لِكَثْرَةِ ذِكْرِ رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ إِيَّاهَا وَثَنَائِهِ عَلَيْهَا، وَقَدْ أُوحِيَ إِلَى رَسُولِ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنْ يُبَشِّرَهَا بِبَيْتٍ لَهَا فِي الجَنَّةِ مِنْ قَصَبٍ

கதீஜா ﵂ அவர்களின்மீது நான் ரோஷம் கொண்டதைப்போல் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களுடைய ஏனைய மனைவிகள்மீது நான் ரோஷம் கொண்டதில்லை. ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கதீஜாவை அதிகமாக நினைவு கூர்வார்கள். அவர்களைப் புகழ்வார்கள். சுவர்க்கத்தில் முத்து மாளிகையொன்று கொடுக்கப்படும் என்று அவருக்கு நற்செய்தி கூறும்படி அல்லாஹ் நபியவர்களுக்கு வஹ்யி மூலம் அறிவித்துள்ளான் என அன்னை ஆயிஷா ﵂ அவர்கள் கூறியுள்ளார்கள். *(புகாரீ 5229,3817,3818)*

❁ 36 ❁

நபியவர்களுக்கு அல்லாஹ்வினால் தேர்வுசெய்யப்பட்டவர்

விசுவாசிகளின் அன்னையர்களில் ஒருவராகிய நம் அன்னை ஜைனப் பின்த் ஜஹ்ஷ் ﵂ அவர்கள் குர்ஆனிலுள்ள 33ஆம்